**வரையறுத்த கந்தளாய் சீனித் தொழிற்சாலை – 2017**

வரையறுத்த கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியைத் தோற்றுவித்தலும் உரிமையும்

வரையறுத்த கந்தளாய் சீனித் தொழிற்சாலை 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டு மீண்டும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது அரசாங்கத்தின் பூரண உரிமையுடனான அரசாங்க கம்பனியாகும்.

## 1.5 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கரும்புத் தொழிலுக்கு தொழிற்சாலையின் காணிகளை உச்ச அளவில் பயன்படுத்தி சீனி உற்பத்திக்கு மேலதிகமாக உப உற்பத்திகளாக எத்னோல் மின்சாரம் சேதனப் பசளை என்பவற்றை உள்ளடக்கிய உற்பத்திகளுக்காக பங்களிப்புச் செய்வதைப் போல கரும்பு விவசாயிகளை ஊக்குவித்து அவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட கந்தளாய் சீனித் தொழிற்சாலை 1993 ஆம் ஆண்டிலிருந்து மூடப்பட்டிருந்ததனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு எதுவித பங்களிப்பினையும் வழங்கியிருக்கவில்லை. எனவே இந் நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகளை உள்ளடக்கிய செலவுகளுக்காக வருடாந்தம் பொதுத் திறைசேரியால் நிதி வழங்கப்படுவதுடன் கடந்த 03 ஆண்டுகள் காலத்தின் போது அத் தொழிற்சாலைக்காக ரூபா 46.473 மில்லியன் பணம் பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்ய முடியாது என்ற போதிலும் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 1,823,959 தொகையான செலுத்த வேண்டிய மீதியை தனியாக காட்டுவதற்குப் பதிலாக கடன்பட்டோர் மீதிக்கு எதிராக தீர்த்து வைக்கப்பட்டு தேறிய பெறுமதியாக ரூபா 40,717,134 பெற வேண்டிய மற்றும் முற்கொடுப்பனவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக்கள் கிரயம் அல்லது நிகர தேறக் கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு கணிக்கப்பட வேண்டிய போதிலும் நீண்ட காலமாக பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படாத இருப்பு களஞ்சியத்தில் காணப்பட்டிருந்தும் அந்த இருப்பின் நிகர தேறக் கூடிய பெறுமதியை கவனத்தில் கொள்ளாது கிரயம் ரூபா 47,440,818 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை நடை பெற்றுக் கொண்டிருக்கும் வேலைக் கணக்கில் ரூபா 840,774 காட்டப்பட்டிருந்ததுடன் அதனை இனங்கண்டு உரிய கணக்குகளிற்குச் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் மீதி ரூபா 1,036,282 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காசு மீதியாக ரூபா 952,818 காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 83,464 ஆல் காசு மீதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 92,066,653 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு |
| பெற வேண்டிய மற்றும் முற்கொடுப்பனவு மீதிகள் | 27,611,572 | |
| உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் காட்டப்பட்டுள்ள இலாப நட்ட செம்மையாக்கல்கள் | 580,953,293 | நாட்குறிப்பு வவுச்சர் |
| பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட மேலதிக நேர படிகள் | 1,484,682 | விபரமான பட்டோலை |

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரையறுத்த கந்தளை சீனித் தொழிற்சாலையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் பணிக்கப்பட்டவாறு நான் பின்வரும் விடயங்களைத் தருகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்விற்கான நோக்கெல்லையும் மற்றும் மட்டுப்படுத்தல்களும் மேலே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் விளக்கங்களும் போதியளவில் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் கம்பனியினால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பதும்,

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளது என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

**2.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 1993 ஆம் ஆண்டிலிருந்து 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 40,717,134 தொகை தீர்த்து வைக்கப்படாது நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய மற்றும் முற்கொடுப்பனவு மீதியாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மின்சார சபைக்கு 1988 ஆம் ஆண்டிலிருந்து 2010 மே மாதம் வரை செலுத்த வேண்டிய ரூபா 76,352,246 பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக கணக்குகளில் காட்டப்பட்டு வருகின்றது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (அ) நிதிப்பிரமாணம் 754(அ) | ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவின் போது பொருள் பதிவேட்டுப் புத்தகம் சமப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பொருள் பதிவேட்டுப் புத்தகம் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 756 | பிரமாணங்களின் பிரகாரம் இருப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக 1997 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,769,102 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,678,186 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,090,916 வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான நிர்வாகச் செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,678,109 தொகையால் அதிகரித்தல் மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 650,971 ஆல் குறைவடைந்தமை மேற்கூறிய வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீளமைப்பதற்காக SLI Developers (PVT) Ltd நிறுவனம் மற்றும் MG Sugar Lanka (Pvt) Ltd நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதி பங்குமுதல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. அந்த பங்கு முதல் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு உடன்படிக்கையிலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகள் சம்பந்தமாக முறையான ஆய்வுகளை மேற்கொள்ளாது தொழிற்சாலைக்குச் சொந்தமான இயந்திரங்களை விற்பனை செய்வதற்கு கேள்வி நடைமுறைகளை ஆரம்பித்திருந்தது. எவ்வாறாயினும் அச் சொத்துக்களின் உரிமை சம்பந்தமாக முதலீட்டாளர் மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் உருவாகிய பிணக்குகள் காரணமாக முதலீட்டாளரால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடுத்திருந்தது. எவ்வாறாயினும், முதலீட்டாளருக்கு தொழிற்சாலை வளவை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளமைப்புச் செய்யும் நடைமுறை 2018 திசெம்பர் 18 ஆந் திகதி வரையும் இடம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) 2012 செப்தெம்பர் 09 ஆந் திகதியிலிருந்து 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையான 607 நாட்களுக்காக வரையறுக்கப்பட்ட கந்தளை சீனி தனியார் கம்பனிக்கு கரும்புகளை கட்டுகின்ற 700 சங்கிலிகளை வாடகை அடிப்படையில் வழங்கியதிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,249,000 வாடகைப் பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

வருடாந்தம் 16,320 மெட்ரிக் தொன் சீனி, 9,000 மெட்ரிக் தொன் மெலேசஸ் மற்றும் 3.9 மில்லியன் லீற்றர் ஸ்பிரீட்டை உற்பத்தி செய்யும் இயலளவுள்ள வரையறுத்த கந்தளாய் சீனித் தொழிற்சாலையை தற்காலிகமாக அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ருந்த 1993 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து எதுவித சீனி உற்பத்தி நடவடிக்கையையும் மேற்கொள்ளாமையின் காரணமாக பிரதேசத்தில் வாழும் ஆயிரக்கணக்கானவர்கள் நேரடியாக மற்றும் மறைமுகமாக தொழிலை இழந்ததன் காரணமாக அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

1991 ஆம் ஆண்டில் மதிப்பீட்டு திணைக்களத்தால் ரூபா 125 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்ட இயந்திர உபகரணங்கள் எதுவித உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தப்படாது முறையான பராமரிப்புக்களும் மேற்கொள்ளப்படாதிருந்ததனால் தற்போது வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலைக்கு மாறியதன் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டு திணைக்களத்தால் ரூபா 60,246 மில்லியனான மேற்கூறிய சொத்துக்களை இரும்பாக விற்பனை செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

### 4.4 ஆளணி நிர்வாகம்

தொழிற்சாலையின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக 33 ஊழியர்களும் 3 அலுவலக உத்தியோகத்தர்களுமாக 36 ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் அங்கீகரித்த பதவியணியினர்கள் இருக்கவில்லை. தற்பொழுது வரை இந்த நிறுவனத்தின் நடவடிக்கைகள் வரிசை அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களும் வரைபு அறிக்கையும் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 02 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தொழிற்சாலைக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) இருப்புக் கட்டுப்பாடு | இருப்பு மெய்மையாய்வினை மேற்கொண்டு காலாவதியான இருப்புக்களை அகற்றுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை |
| (ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | பௌதீக மெய்மையாய்வினை மேற்கொண்டு நீக்கப்பட வேண்டிய சொத்துக்களை இனங்கண்டு அதற்கிணங்க தேவையான நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) மனித வளங்கள் முகாமைத்துவம் | மனித வளத்தை சிறப்பாகவும் வினைத் திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |